செ. கு. எண் 239 நாள் :- 06-12-2011

**ஜெ ஜெயலலிதா**
முதலமைச்சர்

வாய்மையே வெல்லும்

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009.

தேதி 6.12.2011

## கொடி நாள் வாழ்த்துச் செய்தி

தங்கள் இன்னுயிரை ஈந்தேனும் நம் தாய்த் திருநாட்டின் எல்லைப் பகுதிகளைப் பாதுகாப்பதில் முப்படை வீரர்கள் ஆற்றும் சேவையையும், தியாகத்தையும் போற்றும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் திங்கள் 7–ஆம் நாள் படை வீரர் கொடி நாளாக கொண்டாடப்படுகிறது.

தியாகத்தால் தேசம் காத்திடும் நமது படைவீரர்களின் நலனைக் காப்பதும், தாய் திருநாட்டைக் காத்திடப் போராடி இன்னுயிரை இழந்த தியாகச் சுடர்களின் குடும்ப நலன்களைக் காத்து அவர்களுக்கு அனைத்து உதவிகளையும் அளிக்க வேண்டியதும், முப்படையில் பணியாற்றி ஓய்வு பெற்ற முன்னாள் படைவீரர் நலன்களைக் காப்பதும் நமது சமூகப் பொறுப்பாகும். இந்தச் சமுதாயக் கடமையை நாம் நிறைவேற்றிட ஒரு நல்வாய்ப்பாக கொடிநாள் அமைகிறது. கொடி விற்பனை மூலமும், நன்கொடை மூலமும் திரட்டப்படும் நிதி, படை வீரர்களுடைய குடும்பத்தினரின் நல்வாழ்விற்கும், உடல் உறுப்புகளை இழந்த வீரர்களின் மறுவாழ்வுப் பணிகளுக்கும், முன்னாள் படை வீரர்களின் மேம்பாட்டிற்கும் பயன்படுத்தப்படுகிறது.

முப்படை வீரர்களின் வீரதீரச் செயல்களை மதித்து போற்றுவதிலும், அவர்தம் குடும்பத்தினர்களுக்குத் தேவையான உதவிகளை அளிப்பதிலும் தமிழகம் இந்தியாவிலேயே மூதன்மை மாநிலமாக எப்பொழுதும் விளங்கி வருகிறது. அப்பெருமையை தொடர்ந்து நிலைநாட்டிடும் வகையில், நாடு காத்தோர் நலம் காக்க, கொடி நாள் நிதிக்கு தாராளமாக நிதி வழங்கிட வேண்டுமென தமிழக மக்கள் அனைவரையும் நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

[signature]

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9